
# நல்ல சமாரியன்

### பிணியாளிகளுக்கும், துன்பப்படுகிறவர்களுக்கும ஒடுக்கப்பட்டவர்களுக்கும் சேவை செய்தல்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் C4b பாடத்தைப் படிக்கவும்.




பெரும்பாலான மக்கள் ஏன் ஏழைகளாகவும் பிரச்சினைகளோடும் இருக்கின்றனர்? தீய ஆவிகள் மக்களிடம் பொய்களை கிசுகிசுக்கின்றன என்பது ஒரு காரணம். மக்கள் பாவம் செய்ய விரும்பும் போது இப் பொய்களைக் கேட்கின்றனர். தீய ஆவிகள், நாம் பேராசை கொண்டவர்களாகவும், ஒழுக்க மற்றவர்களாகவும் நேர்மையற்றவர்களாகவும் இருக்க விரும்புகின்றன. ஆனால் இந்தப் பாவங்களில் இருந்தும் பொய்களில் இருந்தும் மக்களை தேவனால் விடுவிக்க முடியும். நமது இருதயத்தை அவர் மாற்றி, புதிய விருப்பங்கள் உடையவர்களாகவும் பாவம் செய்ய விரும்பாதவர்களாகவும் நம்மை மாற்ற அவரால் முடியும்.

### 1. தேவ வார்த்தையால் நமது இருதயத்தையும் மனதையும் ஆயத்தம் செய்வோம்

இந்த பாடத்தின் நோக்கம் இல்லாதவர்களுக்கு சேவை செய்வதே. உங்களுக்கும் உங்கள் மந்தைக்கும் இல்லாதவர்கள் மேல் அன்பை - நற்செயல்களை விளைவிக்கும் அன்பைத் தருமாறு கர்த்தரை வேண்டுங்கள்.

அக்கறையுள்ள சமாரியன் எவ்வாறு நடைமுறையில் தன் அன்பைக் காட்டினான் என்பதை லூக். 10:25-37 ல் காண்க.




*(பதில்: காயம்பட்ட பயணியை கவனித்துக் கொண்டதால் சமாரியன் நடைமுறை அன்பைக் காட்டினான். இந்த வகையில் தங்கள் விசுவாசத்தை கிரியையில் காட்டும் விசுவாசிகளுக்கு, இயேசு நித்திய ஜீவனை வாக்களிக்கிறார்).*

இவ்வகையில் செயல்படுவோருக்கு இயேசு என்ன வாக்குத்தத்தம் செய்கிறார்?

*(பதில்: லூக் 10:25 ஐ வசனம் 47 டன் ஒப்பிடவும்).*

**மனப்பாடம்:** 1 யோவான் 3:17-18

## 2. வரும் வாரத்தில் செய்ய வேண்டியவைகளை உடன் ஊழியருடன் திட்டமிடவும்

உங்கள் திட்டங்களை காகிதத்தில் எழுதி அடுத்த ஆராதனை வேளையில் சபைக்கு அறிவியுங்கள். திட்டங்களை தெளிவாக உருவாக்கவும். மிகவும் தேவையில் இருப்போரை கண்டுபிடித்து கலா. 6:10 கூறுவது போல தொண்டு செய்யுங்கள்: ì **ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம்.î**

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுதல்

சமுதாயத்தில் வேதனை தரும் தேவைகளுடன் இருப்பவர்களுக்காக ஆராதனை வேளையில் ஜெபிக்கவும்.

ஆவிக்குரிய வெற்றிகளுக்காக தேவனைத் துதியுங்கள். கடந்த வாரத்தில் நடந்த வேலைகளைப் பற்றிய அறிக்கைகளையும் சாட்சிகளையும் கூறச் சொல்லுங்கள்.

நல்ல சமாரியன் பற்றி இயேசு கூறியதை எடுத்துச் சொல்ல ஒரு உதவியாளரை ஏற்பாடு செய்யவும் (லூக் 10:25-37). இரண்டு விஷயங்களை அறிந்து கொள்ள யாவரையும் கவனித்து கேட்குமாறு கூறவும்.

1) அக்கறையுள்ள சமாரியன் தன்னுடைய நடைமுறை அன்பை எவ்வாறு காட்டினான்?

2) அத்தகையவற்றை செய்வோருக்கு இயேசு வாக்குத்தத்தம் செய்தது என்ன?

பின்னர் என்ன கண்டறிந்தனர் என்பது பற்றி பலவகையான மக்களிடம் கேட்கவும்.

நமது இருதயத்தை ஆராய்ந்து, பாவத்தை அறிக்கை இட்டு, கர்த்தரின் பந்தியை ஆசரிக்கவும். 1 கொரி. 10:16-17 வாசித்து ஐக்கிய விருந்தை அறிமுகப்படுத்தலாம். நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் பங்கேற்கிறோம். தேவ வார்த்தை மாம்சமாகி நம்மோடு வாழ்ந்தார். அவர் பெத்லகேமில் பிறந்தார். அங்கு ஒரு காலத்தில் போவாஸ் பார்லியைப் பயிரிட்டான். 'பெத்லகேம்' என்றால் 'அப்பத்தின் மனை' என்று பொருள். அங்குதான் இயேசு சதையும் இரத்தமும் ஆனார். எனவே அவர் நமக்கு ஜீவ அப்பம் ஆனார்.

தேவ வார்த்தையை நடைமுறைப்படுத்துக. விருப்பத்தேர்வுகள் (Options):

விருப்பத்தேர்வு 1: நல்ல சமாரியன். லூக்கா 10:25-37 ல் உள்ள கதையை பெரியவர்களும் பெரிய பிள்ளைகளும் நடிக்கலாம். சிறியவர்கள் பயணியைத் தாக்கும் திருடர்களாக நடிக்கலாம். ஒரு பெரிய ஆள் கழுதையின் வேடத்தைத் தாங்கட்டும்.

விருப்பத்தேர்வு 2: **திருவாளர் பாரம்பரியம்:** யாராவது ஒருவர் திருவாளர் பாரம்பரியத்தின் வேடத்தைத் தாங்கட்டும். அவர் சமாரியனோடு ஒத்துப்போகிறாரா என்று கேட்கவும். அவர் நம்முடைய முழு நேரத்தையும் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்துவதில் செலவழிக்க வேண்டுமே தவிர சமுதாயத் தொண்டுகள் செய்வதில் நேரத்தை வீண் அடிக்கக் கூடாது என்று வாதாடுகிறார். அவருக்கு பதில் சொல்லுமாறு மக்களைக் கேட்கவும். அவர்கள் தயங்கினால், இயேசு என்ன செய்யச் சொன்னார் என்பதை உங்கள் சொந்த வார்த்தையால் விளக்கி அவரைத் திருத்தவும்.

விருப்பத்தேர்வு 3: **செம்மறிகளும் வெள்ளாடுகளும்** மத். 25:31-4 ல் உள்ள செம்மறிகளும் வெள்ளாடுகளும் பற்றிய உவமையை நாடகமாக்கவும்

**கதை கூறுபவர்** (பெரியவர்): இராஜா, செம்மறி, வெள்ளாடு ஆகியோர் பேசாத பகுதிகளை வாசிக்கவும்.

**இராஜா** (பெரியவர்): இராஜாவின் வார்த்தைகளை வாசிக்கவும் அல்லது மனப்பாடமாகக் கூறவும்.

**செம்மறிகள்** (குழந்தைகள்): செம்மறிகளின் பேச்சை ஒருவர் வாசிக்கலாம் அல்லது மனப்பாடமாகக் கூறலாம்.

**வெள்ளாடுகள்** (குழந்தைகள்) வெள்ளாடுகளின் பேச்சை ஒருவர் வாசிக்கலாம் அல்லது மனப்பாடமாகக் கூறலாம்.

**விருப்பத்தேர்வு 4: சாத்தானின் மிரட்டல்களை எடுத்துரைத்தல்** இரண்டு பேர் இந்தக் கவிதையை வாசிக்கலாம் அல்லது ஒப்புவிக்கவும்.

**பேசுபவர் #1 ஏளனக் குரலில்:**

பொறாமையைத் தூண்டுவதே பிசாசுகளின் விருப்பம்!

எவ்வளவு கசப்பு! எப்படி மனித குற்றம் சாட்டுகிறான்!

பணத்திற்காக பேராசைக் கரங்களை பிடித்து

சுயநலத்திற்காக ஆத்துமாக்களை விற்கிறான்!

**பேசுபவர் #2 மகிழ்ச்சியும் உறுதியுமான குரலில்**

'பொறாமை' என்னும் அக்கினி அம்பை

பிசாசு வில்லில் பொருத்தி நிற்கட்டும்!

நமது கவசம் உறுதியானது, ஒருபோதும் உடையாது!

கடுமையான வீச்சையும் விசுவாசம் தாங்கும்!

தேவையில் இருப்போர்களுக்காக செய்ய திட்டமிட்ட நடவடிக்கைகளை அறிவிக்கவும். அக்கம்பக்கத்தில் உள்ள இல்லாத மக்களுக்கு நீங்கள் செய்ய விரும்புவதைக் கூறுங்கள். பின் உதவவும். யாரெல்லாம் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று தீர்மானிக்கவும். உறுதியான திட்டங்களை உண்டாக்கவும்.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களில் ஒருவருக்கொருவர் உதவவும், ஜெபிக்கவும், திட்டங்களை உறுதிப்படுத்தவும், ஒருவரைஒருவர் ஊக்கப்படுத்துக.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net